## 102. நாணுடைமை

1011. *கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்*
*நல்லவர் நாணுப் பிற*

**இழிவான செயல்களைச் செய்வதற்கு**
**இழுக்கம் தரும் பழி பாவத்திற்கு**
**இரந்த நாணத்திற்கும், பெண்மைக்கே உரித்தான**
**இயல்பாகவே மனம், மொழி, செயல்களின்**
**இழுக்கத்தால் வரும் நாணத்திற்கும் இடையே அதிக வேறுபாடு உண்டு!**

1012. *ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல*
*நாணுடைமை மாந்தர் சிறப்பு*

**வாழ்வதற்கு உணவு, உடை,**
**வாழும் எல்லா மானுட உயிர்களுக்கும்**
**வாய்க்கப் பெற வேண்டிய பொதுவான தேவைகளே ! – ஆனால்**
**வாழ்க்கையில் சிறப்பான தேவை**
**வாழ்வில் வரும் பழிபாவத்திற்கான "நாணம்" தான் !**

1013. *ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்*
*நன்மை குறித்தது சால்பு*

**உயிர்களெல்லாம் தமது இருப்பிடமாகவும் ஆதாரமாகவும்**
**உடம்பையே கொண்டு உள்ளன !**
**'சால்பு' எனும் சான்றாண்மை குணம்**
**சார்ந்து ஆதாரமாக நிற்பது நாணத்திடமே !**

1014. *அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்*
*பிணியன்றோ பீடு நடை*

**நாணம் எனும் அணிகலனை அணிந்த**
**நாகரீகமான சான்றோர்களும் தவறு செய்பவர்களேயானால்**
**"நாணம்" எனும் உணர்வு ஏற்பட்டுவிடும் !**
**நாணம் இல்லாமல் அவர்கள் என்னதான்**
**நாடாளும் மன்னன் போல் வீறு நடையில்**
**நாட்டம் கொண்டாலும் அந்த நடை ஒரு நோயே !**

1015. *பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்*
*குறைபதி என்னும் உலகு*

**பிறருக்கு வரும் பழியையும்**
**பிறருக்குத் தாம் செய்த தீங்கால் தமக்கு வரும் பழியையும்**
**பிரிவினை பார்க்காமல் சுகமாக எண்ணி**
**நாணி கூனிக்குறுகும் சான்றோரை**
**"நாணத்திற்கு இருப்பிடமானவர்" என்று உலகே பாராட்டும் !**

*1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்*
*பேணலர் மேலா யவர்*

**அறிவுடைய சான்றோர்கள் தங்களின்**
**அறமான சான்றாண்மைக்குப் பாதுகாப்பாக**
**அணிகலனாக "நாணமுடைமை"யை கைவிட்டு**
**அகண்ட உலகமே கிடைத்தாலும் விரும்ப மாட்டார் !**

*1017. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்*
*நாண்துறவார் நாணாள் பவர்*

**நாணத்தின் சிறப்பை உணர்ந்த சான்றோர்**
**"நாணுடைமையை"த் தவறாமல் ஒழுகுபவர்**
**நாணத்திற்காக உயிரை விடுவார்களே தவிர**
**நாட்டம் கொண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள**
**நாணத்தை விட்டுவிட மாட்டார் !**

*1018. பிறர்நாணத் தக்கது தானாணா னாயின்*
*அறம்நாணத் தக்க துடைத்து*

**நாணத்தக்க பழி பாவச்செயலை**
**நாணாமல் செய்துவிட்டு அதற்காகக் கொஞ்சம் கூட**
**நாணாமல் இருப்பவரை விட்டு அறமே**
**நாணி விலகி விடும் !**

*1019. குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்*
*நாணின்மை நின்றக் கடை*

**ஒழுக வேண்டிய ஒழுக்கம் தவறினால்**
**ஒருவனுடைய குலப்பெருமை கெட்டு விடும் !**
**ஒருவனுக்குப் பழிக்கு அஞ்சும் நாணம் அழிந்தால்**
**ஒருமித்த நன்மை அனைத்தும் அழியும் !**

*1020. நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை*
*நாணால் உயிர்மருட்டி அற்று*

**மனதில் 'நாணம்' எனும் வெட்கம் இல்லாத**
**மக்கள் உலகில் உயிருடன் நடமாடுவது**
**மரப்பாச்சி பொம்மைக்குக் கயிறு கட்டி**
**மயக்கும் வித்தையுடன் கை கால் ஆட்டுவது போல் !**